**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 11.11.2025**

**OS.229/2018**

**வா.சா.2 திரு. பூச்சி**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எந்த நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும் ஆனால் சர்வே எண் தெரியாது. எவ்வளவு நிலத்திற்கு வழக்கு தாக்கல் ்செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் 1 ஏக்கர் 30 சென்ட். அந்த நிலத்தில் தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். அது எத்தனை வருடமாக உள்ளது என்றால் கடந்த 25 வருடமாக உள்ளது. அந்த தென்னை மரங்கள் யார் வைத்தது என்றால் மணியும் அவரது அப்பா சென்னன்ன கவுண்டர் சேர்ந்துதான் வைத்தார்கள். தற்போது புஷ்பலதா வைத்திருக்கும் நிலத்திற்கும் இந்த வழக்கு சொத்துக்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரே வரப்பு தான் இடையில் உள்ளது.

2. மாடு மேய்ப்பது சம்மந்தமாக இளங்கோவிற்கும் எனக்கும் ஒரு சண்டை நடந்தது என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இளங்கோவிற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை வருடமாக இளங்கோ விவசாயம் செய்கிறார் என்றால் இளங்கோ ஏதும் விவசாயம் செய்வதில்லை, அவர் மனைவி விவசாயம் செய்கிறாரா என்றால் இல்லை. தற்போது யார் விவசாயம் செய்கிறார்கள் என்றால்

புஷ்பலதா மற்றும் அவரது மகன்கள் விவசாயம் செய்கிறார்கள். சுப்பிரமணி என்பவர் யார் என்றால் அப்படி யாரும் இல்லை. எனது அண்ணன் பெயர் சுப்பிரமணி என்றால் சரிதான், அவர் இறந்துவிட்டார். விஜயராணி யார் என்றால் எனது அண்ணன் மகள். மொட்டையன் என்பவர் யார் என்றால் மொட்டையன் என்பவரும், சுப்பிரமணி என்பவரும் ஒருவர்தான் அவர் இறந்துவிட்டார்.

3. புஷ்பலதா எனக்கு என்ன உறவுமுறை என்றால் அக்கா, தங்கை உறவுமுறை. தாவா சொத்து சின்னன்ணனுக்கு எப்படி வந்தது என்றால்அது அவருக்கு பரம்பரையாக வந்த சொத்து. சின்னன்ணன் சொத்துக்களை அவரது பசங்களுக்கு பாகம் கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்துவிட்டார். அவ்வாறு எவ்வளவு வருடத்திற்கு முன்பு பாகம் கொடுத்தார் என்றால் 25 வருடங்களுக்கு முன்பே கொடுத்துவிட்டார். சின்னன்ணன் எந்த சொத்தை அவருக்கு வைத்துக்கொண்டார் என்றால் அவருக்கு எந்த சொத்தையும் வைத்துக்கொள்ளவில்லை. சின்னன்ணன் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து 3 வருடம் ஆகிறது. சின்னன்ணன் இறக்கும்வரை அவருடைய ஜீவனத்திற்கு என்ன செய்தார் என்றால் புஷ்பா வீட்டில்தான் இருந்தார், புஷ்பா தான் அவரை பார்த்துக்கொண்டார். நிலத்தை சின்னன்ணன் எப்போது விற்பனை செய்தார் என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது.

4. தாவாசொத்து புஷ்பாவின் அனுபவத்தில் இல்லை, விற்பனை செய்து வாங்கியவரின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல, புஷ்பாவின் அனுபவத்தில்தான் உள்ளது. புஷ்பாவின் அனுபவத்தில் இல்லை

என்று சொல்லியுள்ளேன் அது எந்த சொத்து என்றால் நான் அப்படி சொல்லவில்லை. தாவா சொத்தில் 25 வருடமாக தென்னை மரம்தான் உள்ளது அதில் வேறு எந்த விளைச்சலும் இல்லை என்றால் மாட்டிற்கு தீவனம் போட்டிருந்தார்கள், கம்பு, சாமை விதைத்திருந்தார்கள். தென்னந்தோப்பில் கம்பு, சாமை வருமா என்றால் வரும். தென்னந்தோப்பில் எந்த விவசாயமும் செய்யவில்லை, அந்த சொத்தை இளங்கோதான் தென்னந்தோப்புடன் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

5. ராணி என்பவர் யார் என்றால் இளங்கோவின் மனைவி. சின்னன்னன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ராணிக்கு விற்பனை செய்து விட்டார் அதை ராணிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது பூர்வீக சொத்து கிடையாது, அந்த சொத்தானது சின்னன்னனுக்கு அரசாங்க நிலம் நிபந்தனை அடிப்படையில் சின்னன்னனுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல, அவருக்கு பூர்வீகமாக வந்த சொத்து. யார் யாருக்கு எவ்வளவு பாகம் வந்தது என்றால் சின்னன்னனுடன் பிறந்தவர்கள் 5 பேர். 1. சின்னன்னன், 2. அண்ணாமலை, 3. அருணாசலம், 4. கிருஷ்ணன், 5. சின்னாண்டி ஆகியோர்கள் சின்னன்னனின் அப்பா பெயர் ஜடையகவுண்டர், ஒவ்வொருவருக்கும் ஜடைய கவுண்டர் தலா இரண்டரைஏக்கர் பாகம் கொடுத்துவிட்டார் ஜடையகவுண்டர் எந்த சொத்தும் வைத்துக்கொள்ளவில்லை.

6. சின்னன்ணனுக்கு எத்தனை மகன்கள் என்றால் 3 மகன்கள். அந்த மகன்களுக்குள் எப்போது பாகம் ஆனது என்றால் சுமார் 30 வருடத்திற்கு முன்பே ஆகிவிட்டது. சின்னன்ணனுக்கு வந்த இரண்டரை ஏக்கரை தான் அவரது மகன்களுக்கு பாகமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஏக்கர் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. சின்னன்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ராணிக்கு விற்பனை செய்து விட்டார் என்பதை மறைத்து பொய்யான சங்கதிகள் எல்லாம் நான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு போட்டுள்ள சொத்தும் 30 வருடத்திற்கு முன்பாகவே சின்னன்ணன் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மணிக்கு வேறு என்ன சொத்து உள்ளது என்றால் அவருக்கு 5 ஏக்கர் உள்ளது அது அவர் தனிப்பட்டு விலைக்கு வாங்கியது. சின்னன்ணனுக்கு பாகமாக வந்த இரண்டரை ஏக்கர் சொத்தில் மீதி 1 ஏக்கரை இரண்டு பேருக்கும் பாகமாக கொடுத்தாரா என்றால் இரண்டு பேருக்கு 2 ஏக்கர்பாகமாக கொடுத்துவிட்டார் ஒருவருக்கு அவர் தனியாக சொத்தை வாங்கி கொடுத்துவிட்டார். எத்தனை வருடத்திற்கு முன்பு யாரிடம் இருந்து கிரையம் வாங்கி கொடுத்தார் என்றால் 30 வருடத்திற்கு முன்பு சிட்லிங்கில் உள்ள ஜடையன் என்பவரிடம் வாங்கியதாக சொன்னார்கள்.

7. தாவா சொத்து சின்னன்ணனுக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டசொத்து அந்த சொத்தை ராணிக்கு தன்னுடைய தேவைக்காக விற்பனை செய்துவிட்டார் அதை மறைத்து நான் பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல. சின்னன்னன் தாவா சொத்தை விற்பனை செய்யும் வரை அவர் தான் அனுபவம் செய்து வந்தார், அதைதான் ராணிக்கு விற்பனை செய்து ராணி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எல்லா சங்கதிகளும் எனக்கு தெரியும், இளங்கோவுடன் எனக்கு சண்டை என்பதால் புஷ்பலதா எனது உறவினர் என்ற காரணத்திற்காக புஷ்பலதாவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் அராஜகம் செய்து ராணியும் இளங்கோவும் வந்ததாக சொல்லியுள்ளேன் எப்படி எந்த உரிமையும் இல்லாமல் அராஜகத்திற்கு வருவார்கள் என்றால் அவர்கள் அந்த சொத்தை தங்களுடையது என்று சொல்லிக்கொண்டு அராஜகத்திற்கு வருகிறார்கள். என்னுடைய நிலத்திலும் அவ்வாறு தான் அராஜகம் செய்ய வருகிறார்கள். நான் புஷ்பலதாவின் உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.11 16:31:57 +0530